செய்தி வெளியீடு எண் :1216 நாள் : 20.07.2022

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன்அவர்கள் நம்ம குடியிருப்பு என்ற புதிய செயலியை தொடங்கி வைத்தார்

* * * * * * * *

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் இன்று (20.07.2022) மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் நம்ம குடியிருப்பு செயலியை தொடங்கி வைத்து பேசுகையில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புதாரர்கள் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தங்களது தவணைகளை எளிய முறையில் செலுத்திட வேண்டும் என்பதற்காக நம்ம குடியிருப்பு என்ற புதிய செயலி இன்றைய தினம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த செயலியை குடியிருப்புதாரர்கள் தங்களது அலைபேசியில் பதிவிறக்கம் செய்து கொண்டு வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மாத தவணைத் தொகை, நம் குடியிருப்பு நம் பொறுப்பு திட்டத்திற்கான பராமரிப்பு தொகை, நிலுவைத் தொகை, போன்றவற்றை செலுத்தலாம். www.tnuhdb.tn.gov.in என்ற இணைய தள முகவரியில் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையினை QR code மூலமாகவும் செலுத்தலாம்.

நம் குடியிருப்பு நம் பொறுப்பு திட்டத்தின் கீழ் இதுவரை 417 குடியிருப்போர் நலச்சங்கம் உருவாக்கப்பட்டு 206 குடியிருப்போர் நலச்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. குடியிருப்போர் நலச்சங்கம் பத்திரப்பதிவு துறையில் பதிவிற்கான கட்டணத்தை அரசால் குடியிருப்போர் நலச்சங்கத்திற்கு திருப்பி வழங்கப்படுகிறது. குடியிருப்போர் நலச்சங்கம் பதிவு செயப்பட்ட பிறகு அதனுடைய வங்கி கணக்கில் 3 மாதத்திற்கான இணை மானியம் அரசால் வழங்கப்படுகிறது. குடியிருப்புகள் சம்மந்தமான குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய 84 சமுதாய பங்களிப்பு உதவியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. குடியிருப்புதாரர்களின் குடியிருப்பு சம்மந்தமாக மின்தூக்கி, குடிநீர்

பிரச்சனை , கழிவுநீர் பிரச்சனை போன்ற குறைகளை நிவர்த்தி செய்ய இப்பணியாளர்கள் மூலம் பதிவேடு பராமரிக்கப்பட்டு குறைகள் நிவர்த்தி செய்யப்படுகிறது. கடந்த சட்டமன்ற கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் குடியிருப்புகளுக்கு மற்றும் மனைகளுக்கு கிரையப் பத்திரங்கள் வழங்குவது , அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம் , புதிய மறுகட்டுமான திட்டப்பகுதிகளின் தற்போதைய நிலை , பழுது பார்ப்பு மற்றும் புனரமைப்பு பணிகள் அயல்நாட்டு நிதி திட்டங்கள் , பயனாளிகள் தாமாகவே வீடு கட்டும் திட்டம், மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு திட்டப்பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது .இதுவரை 3405 குடியிருப்புதாரர்களுக்கு கருணைத் தொகையாக ரூபாய் 8 கோடியே 17 லட்சத்து 20 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மை செயலாளர் திரு.ஹித்தேஷ்குமார் எஸ்.மக்வானா இ.ஆ.ப. , தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. , வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திரு.மீ.தங்கவேல் இ.ஆ.ப. , வாரிய செயலாளர் திருமதி துர்கா மூர்த்தி, வாரிய தலைமை பொறியாளர்கள் திரு.வே.சண்முகசுந்தரம், திரு.ஆர் இராஜசேகரன் , வாரிய பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்,

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in